மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அவர்களுக்கு நோயைத் தடுப்பதற்கு சொல்லித் தருகிறோம். நோய் பரவாமல் இருக்கின்ற வகையில் தடுப்பு முறைகளைக் கையாள்கிறோம். மிக எளிதான முறையில் மருந்துகளை எல்லாம் கொண்டு போய் கொடுக்கிறோம். அத்தோடு மேலும் அடுத்த ஆண்டு ஒரு இலட்சம் ஏக்கர் அளவில் வாழை பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுக்கு நினைவுச் சின்னங்கள்.

189—(*வினா எண் 1907) டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார்மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவிடவும் அரசு விழா ஏதேனும் எடுக்கவும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை அருகில் உள்ள விஜய மங்களத்தில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் திருக்கோயிலுக்கு அருகில் சமணர் முறைப்படி தூண் ஒன்று நிறுவலாம் எனும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தூணில் நான்கு பக்கங்களிலும் விஜயமங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார்மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோரைப் பற்றி எழுதலாம் என்றும் ஆண்டுதோறும் விழா எடுக்கவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சங்கச் சான்றோர்கள் பிறந்த ஊரைக் கண்டறிந்து ஆங்காங்கு சான்றோர் நினைவுக்கல் நிறுவும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்டந்தோறும் படிப்படியாகச் செயற்படுத்தப் பெறும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, அன்னை தமிழுக்கு அணி அணியாக அணி சேர்க்கும் தங்கத் தலைவர், புரட்சித் தலைவருடைய அரசு, சங்கப் புலவர்களின் நினைவை போற்றும் வண்ணம் கொங்கு

1987 மார்ச் 26] [டாக்டர் அ. பொன்னுசாமி]

நாட்டுக்கு தலைமை ஏற்கும் தகுதி பெற்ற விஜய மங்களத்தில் நினைவுச் சின்னம் அமைக்க இருப்பதற்கு நன்றி. அதே சமயத்திலே அந்த சங்கப் புலவர்கள் எழுதிய நூல்கள் என்ன என்றும், அவைகள் எல்லாம் ஓலைச் சுவடிகளாக இருக்கின்றன என்றும் அவைகளை எல்லாம் அரசே சிறந்த முறையில் அச்சிட்டு அனைத்து நூலகங்களுக்கும் வழங்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கொங்கு வேளிர் என்பவர் பெருங்காதை என்னும் காப்பியத்தை படைத்து இருக்கிறார். அடியார்க்கு நல்லார் அவர்கள் சிலம்புக்கு உரை எழுதியிருக்கிறார்கள். பவணந்தி முனிவர் நன்னூல் இலக்கண நூலை ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

திரு. சு. சிவராஜ்: தலைவர் அவர்களே, சங்க கால புலவா கபிலர் அவர்கள் எங்களுடைய திருக்கோயிலூரில் வாழ்ந்து வளர்ந்திருக்கிறார். அங்கே இருக்கின்ற ஒரு குன்று இன்றைக்கும் கபிலர் குன்று என்று அழைக்கப்படுகிறது. அந்தக் குன்றை தமிழக அரசு, கபிலருடைய நினைவுச் சின்னமாக்கி அதை பராமரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது இல்லை. கபிலர் ஆங்கு இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. கபிலர் மலைப் பகுதியில் இருந்ததாகவும், அதற்கு சான்றுகள் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இவற்றை ஆய்ந்து அரசு அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: தலைவர் அவர்களே, இங்கு சங்க கால புலவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புவதாக சொல்வதற்கு நன்றி சொன்னாலும் கூட வரலாற்றிலே முதல் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு வரை இடைப்பட்ட காலத்திலே வாழ்ந்த அற்புதமான கவிஞர்கள் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், நம்முடைய பட்டிணத்து அடிகளார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார், நான்முகர் போன்ற 63 நாயன்மார்கள் போன்றவர்களுடைய வரலாறுகள் திருக்கோவிலிலே வைத்திருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். இருந்தாலும் வரலாற்றுச் சிறப்புடைய தமிழை அள்ளித் தந்திருக்கிறார்களே, அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவீர்களா? மேலும் உரை ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதாகச்

சொன்னதற்கு நன்றி. அப்படி உரை எழுதிய நம்முடைய கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் காஞ்சிபுரத்திலே கந்த புராணத்தை எழுதியிருக்கிறார்களே, அவர்களுக்குத் தருவீர் களா? பரிமேலழகர் காஞ்சியிலே பிறந்த ஒரு அர்ச்சகர் தான். அவருக்கும் நினைவுச் சின்னம் அமைப்பீர்களா? இப்படிப்பட்ட வரலாற்று நினைவுச் சின்னங்களை அமைக்கின்ற முறையை நம் முடைய தமிழக அரசு (மணியடிக்கப்பெற்றது) தமிழைச் சொல் கிறது. ஆகவே சொல்கிறேன். கன்னித் தமிழை வளர்த்திருக் கின்ற சங்ககால அறிஞர்களுக்கு நினைவுச் சின்னம் வகுக்கப்பட வேண்டும். வகுக்கப்படுமா? அப்படி வகுக்கின்றபோது அதில், எழுதிய நூல்களுடைய வரலாற்றைச் சொல்ல வேண்டும். சொல் வீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் தமிழிலேயே கேள்வியாக கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்ட வினாவிற்கு பதில் அளிக்கின்ற போது தெளிவாகச் சொல்லி விட்டேன். சங்கப் புலவர்களுக்கு நினைவுக்கல் நாட்டல் என்ற முறையிலே அது அரசால் மேற்கொள் ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி புலவர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்புகின்றபோது கட்டாயம் அவருடைய வரலாறு பொறிக்கப்படும்.

பாடநூல் நிறுவனத்தால் அச்சிடப்பெற்ற பாடநூல்கள்.

190—(*வினா எண் 10519) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு பாட நூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாட நூல்கள் எவ்வளவு?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட காகிதம் எத்தனை டன்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்ற ஆண்டு (1985-86) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாடநூல்கள் 309.98 லட்சங்கள் ஆகும்.

(ஆ) 1985-86க்கு மைய அரசு ஒதுக்கிய சலுகை விலைக் காகிதம் 6,103 டன்கள். ஆனால் காகித ஆலை வழங்கியது 3,310 டன் ஆகும். வெளிச் சந்தையில் வாங்கியது 3,360 டன் ஆகும்.